முழுப்பதிப்புரிமையுடையது

அந்தரங்கமானது

# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## க.பொ.த. (சாதாரண தர)ப் பரீட்சை - 2020

## 33 - வரலாறு

## புள்ளியிடும் திட்டம்

Department of Examinations - Sri Lanka



இது விடைத்தாள் பரீட்சகர்களின் உபயோகத்துக்காகத் தயாரிக்கப்பட்டது. பிரதம பரீட்சகர்களின் கலந்துரையாடல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் பரிமாறிக்கொள்ளும் கருத்துக்களுக்கிணங்க, இதில் உள்ள சில விடயங்கள் மாறலாம்.

இறுதித் திருத்தங்கள் உள்ளடக்கப்படவுள்ளன.

Download all Past Papers>  https://bookbeekid.com/resource/past-papers/

# கல்விப் பொது தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை - 2020

## 33 - வரலாறு

**வரலாறு** I 01 x 40 = 40 புள்ளிகள்

---

**வரலாறு** II

1 ஆம் வினா கட்டாயமானது

அ. I 18

ஆ. II 12 = 30 புள்ளிகள்

**பகுதி** II

| | | | |
|---|---|---|---|
| வினா இலக்கம் 2 | = | 18 புள்ளிகள் | ஏதாவது 4 வினாக்களுக்கு $4 \times 18 = 72$ புள்ளிகள் |
| வினா இலக்கம் 3 | = | 18 புள்ளிகள் | |
| வினா இலக்கம் 4 | = | 18 புள்ளிகள் | |
| வினா இலக்கம் 5 | = | 18 புள்ளிகள் | |
| வினா இலக்கம் 6 | = | 18 புள்ளிகள் | |
| வினா இலக்கம் 7 | = | 18 புள்ளிகள் | |

**பகுதி** III

| | | | |
|---|---|---|---|
| வினா இலக்கம் 8 | = | 18 புள்ளிகள் | ஏதாவது ஒரு வினாவிற்கு $1 \times 18 = 18$ புள்ளிகள் |
| வினா இலக்கம் 9 | = | 18 புள்ளிகள் | |

**120 புள்ளிகள்**

Department of Examinations - Sri Lanka

**இறுதிப் புள்ளியைக் கணித்தல்**

**முழு விடைத்தாளுக்குமான இறுதிப்புள்ளியை, புள்ளி வழங்கும் குழுவினால் தீர்மானிக்க முடியாது**

Download all Past Papers>> https://bookbeekid.com/resource/past-papers/

## க.பொ.த (சா.தர)ப் பரீட்சை - 2020

## விடைத்தாள்களுக்குப் புள்ளியிடலுக்கான பொது நுட்ப முறைகள்

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் போதும், புள்ளிப்பட்டியலில் புள்ளிகளைப் பதியும் போதும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட முறையைக் கடைப்பிடித்தல் கட்டாயமானதாகும். அதன்பொருட்டு பின்வரும் முறையில் செயற்படவும்.

1. சகல உதவிப் பரீட்சகர்களும் விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுவதற்கு சிவப்பு நிற மைப் பேனாவை பயன்படுத்தவும்.
2. பிரதம பரீட்சகர் ஊதாநிற மைப்பேனாவைப் பயன்படுத்த வேண்டும்.
3. சகல விடைத்தாள்களினதும் முதற்பக்கத்தில் உதவிப் பரீட்சகரின் குறியீட்டெண்ணைக் குறிப்பிடவும். இலக்கங்கள் எழுதும்போது **தெளிவான இலக்கத்தில்** எழுதவும்.
4. இலக்கங்களை எழுதும்போது பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தனிக்கோட்டினால் கீறிவிட்டு, மீண்டும் பக்கத்தில் சரியாக எழுதி, ஒப்பம் இடவும்.
5. ஒவ்வொரு வினாவினதும் உபபகுதிகளின் விடைகளுக்காக பெற்றுக்கொண்ட புள்ளியை பதியும் போது அந்த வினாப்பகுதிகளின் இறுதியில் △ இன் உள் பின்னங்களாக பதியவும். இறுதிப் புள்ளியை வினா இலக்கத்துடன் ☐ இன் உள் பின்னமாகப் பதியவும். புள்ளிகளைப் பதிவதற்கு பரீட்சகர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிரலை உபயோகிக்கவும்.
6. எண்கணித பரிசோதகர் புள்ளிகளைச் சரிபார்ப்பதற்கு நீல அல்லது கறுப்பு நிறமைப் பேனாவைப் பயன்படுத்த வேண்டும்.

**உதாரணம் - வினா இல 03**

| | | |
|---|---|---|
| (i) ..................................................................<br>..................................................................<br>.................................................................. | ✓ | △ 4/5 |
| (ii) ..................................................................<br>..................................................................<br>.................................................................. | ✓ | △ 3/5 |
| (iii) ..................................................................<br>..................................................................<br>.................................................................. | ✓ | △ 3/5 |
| **மொத்தம்** ⟶ | | ☐ 10/15 |

**பல்தேர்வு விடைத்தாள்**

**1. துளைத்தாள் தயாரித்தல்**

I. புள்ளி வழங்கும் திட்டத்தின் படி சரியான தெரிவைத் துளைத்தாளில் அடையாளமிடவும்.

II அவ்வாறு அடையாளமிடப்பட்ட இடத்தை வெட்டி நீக்கித் துளைத்தாளைத் தயாரிக்கவும்.

III துளைத்தாளை விடைகளின் மீது சரியாக வைத்துக்கொள்ளக்கூடியதாகச் சுட்டெண் அடைப்பையும் வெட்டி நீக்கவும். சரியான விடைகளின் எண்ணிக்கையைக் காட்டும் அடைப்பையும் வெட்டி நீக்கவும்.

IV சரியான, பிழையான விடைகளை குறிப்பிடக்கூடியதாக ஒவ்வொரு வரிசைக்கும் இறுதியில் வெற்று நிரையொன்றை வெட்டி ஏற்படுத்திக் கொள்ளவும்.

V **வெட்டிக்கொண்ட துளைத்தாளில் பிரதம பரீட்சகரிடம் கையொப்பம் பெற்று அங்கீகரித்துக் கொள்ளவும்.**

Department of Examinations - Sri Lanka


Download all Past Papers >> https://bookbeekid.com/resource/past-papers/

2. அதன் பின்னர் விடைத்தாளை நன்கு பரிசீலித்துப் பார்க்கவும். ஏதாவது வினாவுக்கு, ஒரு விடைக்கும் அதிகமாக குறியிட்டிருந்தாலோ, ஒரு விடைக்காவது குறியிடப்படாமலிருந்தாலோ தெரிவுகளை வெட்டிவிடக்கூடியதாக கோடொன்றைக் கீறவும். சில வேளைகளில் பரீட்சார்த்தி முன்னர் குறிப்பிட்ட விடையை அழித்துவிட்டு வேறு விடைக்குக் குறியிட்டிருக்க முடியும். அவ்வாறு அழித்துள்ள போது நன்கு அழிக்காது விட்டிருந்தால், அவ்வாறு அழிக்கப்பட்ட தெரிவின் மீதும் கோடிடவும்.

3. துளைத்தாளை விடைத்தாளின் மீது சரியாக வைக்கவும். சரியான விடையை ✓ அடையாளத்தாலும் பிழையான விடையை × அடையாளத்தாலும் இறுதி நிரலில் அடையாளமிடவும். சரியான விடைகளின் எண்ணிக்கையை அவ்வவ் தெரிவுகளின் இறுதி நிரையின் கீழ் எழுதவும். அத்துடன் அவற்றை கூட்டி சரியான புள்ளியை உரிய கட்டத்தில் எழுதவும். புள்ளி பரிவர்த்தனை செய்யும் சந்தர்ப்பங்களில் பரிவர்த்தனை செய்யப்பட்ட புள்ளியை உரிய கூட்டினுள் எழுதவும்.

**கட்டமைப்பு கட்டுரை மற்றும் கட்டுரை விடைத்தாள்கள்**

1. பரீட்சார்த்திகளால் விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்டுள்ள இடங்களையும், பக்கங்களையும் குறுக்குக் கோடிட்டு வெட்டிவிடவும். **பிழையான பொருத்தமற்ற விடைகளுக்குக் கீழ் கோடிடவும். புள்ளி வழங்கக்கூடிய இடங்களில் ✓ அடையாளமிட்டு அதனைக் காட்டவும்.**
2. புள்ளிகளை குறிப்பிடும்போது ஓவலண்ட் கடதாசியின் வலது பக்க நிரலைப் பயன்படுத்தவும்.
3. சகல வினாக்களுக்கும் கொடுத்த முழுப் புள்ளியை விடைத்தாளின் முன் பக்கத்திலுள்ள பொருத்தமான பெட்டியினுள் வினா இலக்கத்திற்கு நேராக **2 இலக்கங்களில் பதியவும்.** வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தலின் படி வினாக்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். எல்லா வினாக்களினதும் புள்ளிகளும் முதல் பக்கத்தில் பதியப்பட்ட பின் விடைத்தாளில் மேலதிகமாக எழுதப்பட்டிருக்கும் விடைகளின் புள்ளிகளில் குறைவான புள்ளிகளை வெட்டி விடவும்.
4. மொத்த புள்ளிகளை கவனமாக கூட்டி முன் பக்கத்தில் உரிய கூட்டில் பதியவும். விடைத்தாளில் வழங்கப்பட்டுள்ள விடைகளுக்கான புள்ளியை மீண்டும் பரிசீலித்த பின் முன்னால் பதியவும். ஒவ்வொரு வினாக்களுக்கும் வழங்கப்படும் புள்ளிகளை உரிய விதத்தில் எழுதவும்.

✶ **புள்ளிப்பட்டியல் தயாரித்தல்**

I. ஒரு வினாப்பத்திரம் மாத்திரம் உள்ள பாடங்கள் தவிர ஏனைய சகல பாடங்களுக்குமான இறுதிப்புள்ளி குழுவினுள் கணிப்பிடப்படமாட்டாது.

II. ஒவ்வொரு வினாப்பத்திரத்துக்குமான இறுதிப்புள்ளி தனித்தனியான புள்ளிப்பட்டியலில் பதியப்பட வேண்டும்.

III. வினாப்பத்திரம் I இற்கான புள்ளி புள்ளிப்பட்டியலில் "**Total Marks**" என்ற நிரலில் **பதிந்து எழுத்திலும் எழுத வேண்டும்.**

IV. வினாப்பத்திரம் II இற்கான புள்ளிப் பட்டியலை தயார் செய்யும்போது பகுதிப் புள்ளிகளைப் பதிவதோடு வினாப்பத்திரம் II இன் இறுதிப் புள்ளிகளை புள்ளிப் பட்டியலில் "**Total Marks**" என்ற நிரலில் பதியவும்.

V. 43 சித்திரப் பாடத்திற்குரிய I, II, மற்றும் III ஆம் வினாப்பத்திரங்களுக்குரிய புள்ளிகளை தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதிந்து **எழுத்திலும் எழுதுதல் வேண்டும்.**

VI. 21 – சிங்களமொழியும் இலக்கியமும், 22 – தமிழ்மொழியும் இலக்கியமும் ஆகிய இரு பாடங்களும் வினாப்பத்திரம் I இற்குரிய புள்ளி புள்ளிப்பட்டியலில் பதிந்து எழுத்திலும் எழுத வேண்டும். வினாப்பத்திரம் II, III இற்கான பகுதிப்புள்ளிகளை உள்ளடக்கி அவ் வினாப்பத்திரத்தின் மொத்தப் புள்ளிகளை, புள்ளிப்பட்டியலில் பதிய வேண்டும்.

**முக்கிய குறிப்பு :**

I. சகல சந்தர்ப்பங்களிலும் ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் உரிய முழுப்புள்ளியானது முழுத்தானத்தில் புள்ளி பட்டியலில் பதியப்படுதல் வேண்டும். எந்தவிதமான காரணங்களிற்காகவும் வினாப்பத்திரத்தின் இறுதிப்புள்ளியானது தசம தானங்களில் பதியப்படலாகாது.

II. புள்ளிப் பட்டியலின் சகல பக்கங்களிலும் புள்ளிகளைப் பதிந்து உதவிப் பரீட்சகர், புள்ளிகளை சரிபார்த்த உதவிப் பரீட்சகர், மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் எண்கணித பரீட்சகர் மற்றும் பிரதம பரீட்சகர் தமது குறியீட்டு இலக்கத்தை எழுதி கையொப்பமிட்டு உறுதிப்படுத்துவது கட்டாயமாகும்.

○ ○ ○

Department of Examinations - Sri Lanka



Download all Past Papers >> https://bookbeekid.com/resource/past-papers/

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka

33 T I

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2020
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2020
General Certificate of Education (Ord. Level) Examination, 2020

ඉතිහාසය I
வரலாறு I
History I

පැය එකයි
ஒரு மணித்தியாலம்
One hours

**கவனிக்க :**
(i) **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக. இவ்வினாத்தாளுக்கு **80** புள்ளிகள் வழங்கப்படும்.
(ii) **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.
(iii) **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.**
(iv) அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றைப் பின்பற்றுக.

**1.** மகாவம்சத்தின் முதல் பாகத்தை எழுதிய மகாநாம தேரர் வசித்து வந்த கல்வி நிறுவகம் எது?
(1) அனுராதபுரம் திக்சந்த செனவியா பிரிவேனா (2) பொலன்னறுவை ஆலாஹன பிரிவேனா
(3) தம்பதெனியா மயூரபாத பிரிவேனா (4) காரகல பத்மாவதி பிரிவேனா

**2.** எக்காலத்தில் இலங்கை வரலாறு பற்றிய தகவல்கள் அடங்கிய கல்வெட்டுகள் எழுதுதல் ஆரம்பிக்கப்பட்டது?
(1) வரலாற்றுக்கு முற்பட்ட காலம் (2) முன் வரலாற்றுக் காலம்
(3) ஆரம்ப வரலாற்றுக் காலம் (4) வரலாற்றுக் காலம்

**3.** பின்வருவனவற்றுள் அனுராதபுர காலத்தின் ஆரம்ப கல்வெட்டுகளில் பயன்படுத்தப்பட்ட எழுத்துகளைக் குறிப்பிடும் பெயர் எது?
(1) கரோஷ்டி (2) நாகர (3) பல்லவ (4) பிராமி

**4.** புராதன மன்னர்கள் மக்களுக்கு அறிவுறுத்துவதற்காக விதிக்கப்பட்ட பல்வேறு சட்டங்கள் உள்ளடக்கப்பட்ட கல்வெட்டுகள் நிரல் **I** இலும் அவற்றில் அடங்கியுள்ள தகவல்கள் நிரல் **II** இலும் குறிப்பிடப்பட்டுள்ளன. நிரல் **I** இன் ஒழுங்குமுறைக்கமைய நிரல் **II** இனை பொருத்தும் போது வரும் சரியான விடை எது?

| நிரல் I | நிரல் II |
|---|---|
| 1. வேவல்கெட்டிய கல்வெட்டு | A - ஒரு துறைமுகத்திலிருந்து அறவிடப்பட்ட சுங்க வரி |
| 2. பதுளை தூண் கல்வெட்டு | B - ஒரு சந்தையின் நடவடிக்கைகள் தொடர்பான சட்டதிட்டங்கள் |
| 3. கொடவாய கல்வெட்டு | C - கிராமங்களில் நீதிமன்ற நடவடிக்கைகளும் குற்றச் சட்டங்கள் பற்றிய தகவல்களும் |
| | D - சூழல் மற்றும் விவசாய நடவடிக்கைகள் பற்றிய சட்டங்கள் |

(1) A B C (2) C B A (3) C D A (4) D C B

**5.** குகைக் கல்வெட்டு அல்லது கடாரம் கல்வெட்டுகளில் அதிகளவில் அடங்கியுள்ளது.
(1) அரசர்கள் பற்றிய தகவல்கள்
(2) அரச கட்டளைகள் பற்றிய தகவல்கள்
(3) குகைகளைத் தானம் செய்த தனியாள் பற்றியவை
(4) வைத்தியசாலைகளுக்குத் தானமாக வழங்கப்பட்ட காணிகள் பற்றியவை


Download all Past Papers >> https://bookbeekid.com/resource/past-papers/
Department of Examinations - Sri Lanka

6. பின்வருவனவற்றுள் இலங்கையானது பல்வேறு வெளிநாடுகளின் செல்வாக்குக்கு உட்பட்ட போதும் இலங்கை தனக்கே உரித்தான தனித்துவமான கலாசாரத்தைக் கட்டியெழுப்பியமைக்கான காரணம் யாது?
(1) இந்திய உபகண்டத்திற்கு அருகில் அமைந்திருத்தல்
(2) சிறப்பான தரைத்தோற்ற வேறுபாடுகளுடனான தீவாக அமைந்திருத்தல்
(3) இந்து சமுத்திரத்தின் மத்தியில் அமைந்திருத்தல்
(4) மேலைத்தேய கீழைத்தேய இருபக்க வர்த்தகப் பாதையின் மத்திய நிலையமாக இருத்தல்.

7. இலங்கையில் ஹோமோசேப்பியன் மனிதன் வாழ்ந்ததாகக் கருதப்படும் காலம் ஏறத்தாழ இன்றிலிருந்து எத்தனை வருடங்களுக்கு முன்னர் ஆகும்?
(1) ஒரு இலட்சத்து இருபத்தையாயிரம் (2) எண்பதினாயிரம்
(3) முப்பத்தெட்டாயிரம் (4) இருபத்தெட்டாயிரம்

8. புராதன காலத்தில் கீழைத்தேய நாடுகளில் பெரும்பாலானோரின் விருப்புக்கேற்ப தெரிவுசெய்யப்பட்ட ஆட்சியாளர் எப்பெயரால் குறிப்பிடப்பட்டார்?
(1) மபுறுமுக (2) கிராமிக (3) மஹாசம்மத (4) சக்கரவர்த்தி

9. உலர் வலயத்தில் சிறிய கிராமக் குளங்களை மையமாகக் கொண்ட குடியிருப்புகள் எக்காலத்தில் பரவின?
(1) வரலாற்றுக்கு முற்பட்ட காலம் (2) முன் வரலாற்றுக் காலம்
(3) ஆரம்ப வரலாற்றுக் காலம் (4) வரலாற்றுக் காலம்

10. ஆரம்ப வரலாற்றுக் காலத்தில் நதிப்படுக்கைகளுக்கு அப்பாலான குடியிருப்புகளில் வாழ்ந்தோர் தமது சீவனோபாய முறையாகக் கொண்டது.
(1) விலங்கு வளர்ப்பு (2) சேனைப் பயிர்செய்கை
(3) சேற்று வயல் வேளாண்மை (4) வியாபாரம்

11. புராதன இலங்கையில் பருமகமார் பெற்றிருந்த அரசியல் ஆதிக்கத்தை மையப்படுத்தப்பட்ட நிர்வாக முறையாக்கிய முதல் ஆட்சியாளன்
(1) பண்டுகாபய மன்னன் (2) காவந்தீச மன்னன்
(3) துட்டகைமுனு மன்னன் (4) வசப மன்னன்

12. இலங்கையின் புராதன சமூகத்தில் நிலவிய பல்வேறு கைவினைப் பணியாளர்களைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்ட பெயர்கள் நிரல் **I** இலும் அவர்களின் கைவினைத் தொழில்கள் நிரல் **II** இலும் குறிப்பிடப்பட்டுள்ளன. நிரல் **I** இன் ஒழுங்குமுறைக்கமைய நிரல் **II** இனைப் பொருத்தும் போது வரும் சரியான விடை எது?

| நிரல் I | நிரல் II |
|---|---|
| 1. கபர | A - தங்கக் கைத்தொழில் |
| 2. சிதகர | B - இரும்பு கைத்தொழில் |
| 3. துலாதார | C - தந்தச் செதுக்கல் கைத்தொழில் |
| 4. தடிக | D - சித்திரக்கலை |
| | E - மட்பாண்டக் கைத்தொழில் |

(1) A B C D (2) B C A E (3) B D A C (4) E D A C

13. புராதன இலங்கையில் துறைமுகங்களின் அருகில் உருவாகிய குடியிருப்புகளைக் குறிப்பிடும் பெயர் யாது?
(1) பட்டானகாம (2) கேவட்டகாம (3) மணிகாரகாம (4) கசீகாரகாம

14. இலங்கையில் உருவாக்கப்பட்டு தெற்கு ஆசியாவுக்குப் பரவியதாகக் கருதப்படும் தொழினுட்ப நிருமாணிப்பு எது?
(1) கலிங்கல் தொட்டி (2) தூபி
(3) நீர்ப்பூங்கா (4) தெடிகம யானை விளக்கு

Department of Examinations - Sri Lanka


Download all Past Papers >> https://bookbeekid.com/resource/past-papers/

**15.** நிஸ்ஸங்கமல்ல மன்னனின் ஆட்சியில் காவுதகனு என்ற கற்றூண்கள் நாட்டப்பட்டது
(1) பொஹொய கருமங்களைச் செய்யும் நிலத்தின் எல்லையைக் காட்டுவதற்கு
(2) சங்கத்தினருக்கு உரிய காணிகளின் எல்லையைக் காட்டுவதற்கு
(3) பிரதான வீதிகளின் தூரத்தினைக் காட்டுவதற்கு
(4) குளக்கட்டின் நீளத்தைக் காட்டுவதற்கு

**16.** பின்வருவனவற்றுள் மிகச் சிறந்த தொழினுட்பத் திறமை கொண்ட புராதன நீர்ப்பாசன நிருமாணிப்பு எனப் பாதுகாக்கப்படும் மடைக்கதவு எது?
(1) பதவியா (2) மாதுறுஓயா (3) நாச்சடுவ (4) மின்னேரியா

**17.** A, B, C, D எனத் தரப்பட்டுள்ள பின்வரும் கூற்றுகளில் வசப மன்னன் பற்றிய இரண்டு சரியான கூற்றுகள் உள்ளடங்கிய விடை எது?
A - அரச அனுசரணையுடன் முதலாவது குளத்தைக் கட்டுவித்தமை
B - சோழர் ஆதிக்கத்திலிருந்து நாட்டை விடுவித்தமை.
C - இலம்பகர்ண வம்சத்தின் முதலாவது ஆட்சியாளன்.
D - நாட்டின் உள்ளூர் நிர்வாகத்தை முறையாக அமைத்து வரி அறவிடுதலை ஒழுங்குமுறையாக்கியமை
(1) A உம் B உம் (2) A உம் D உம் (3) B உம் C உம் (4) C உம் D உம்

**18.** பின்வரும் கூற்றுகளில் பொலன்னறுவைக் காலம் பற்றிய **பிழையான** கூற்று எது?
(1) பௌத்த சமயம், கலாசாரம் என்பவற்றில் இந்து சமய செல்வாக்கைக் காணக்கூடியதாயிருத்தல்
(2) மாகனின் ஆக்கிரமிப்பினால் பொலன்னறுவை இராசதானி வீழ்ச்சியடைந்தமை
(3) பொலன்னறுவைக் காலத்தில் மகாதித்த பிரதான துறைமுகமாக விளங்கியமை
(4) நிர்வாக மையமாக முதலில் பொலன்னறுவையைத் தெரிவு செய்தோர் சோழர்கள் ஆவர்.

**19.** நிஸ்ஸங்கமல்ல மன்னனின் பின்னர் பொலன்னறுவையின் சிம்மாசனத்துக்குக் கலிங்க, பாண்டிய அரச வம்சத்தவரிடையே நிலவிய ஆதிக்கப் போராட்டத்தில் பாண்டிய வம்சத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திய பெண்மணி
(1) சுகலா (2) கல்யாணவதி
(3) லீலாவதி (4) திரிலோகசுந்தரி

**20.** நிரல் **I** இல் இலங்கையில் நிலவிய சில புராதன தலைநகரங்களும் நிரல் **II** இல் அந்தத் தலைநகருடன் தொடர்புடைய சில சம்பவங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. நிரல் **I** இன் ஒழுங்குமுறைக்கேற்ப நிரல் **II** இனைப் பொருத்தும் போது வரும் சரியான விடை எது?

| நிரல் I | நிரல் II |
|---|---|
| 1. யாப்பகுவா | A - அராபிய இனத்தவரான இபன்பத்தூதா இலங்கைக்கு வந்தமை |
| 2. குருணாகல் | B - பிலிப் த ஒலிவேரா தலைமையில் போர்த்துக்கேய இராணுவ நடவடிக்கை |
| 3. கம்பளை | C - சிங்கள ஜாதக கதை நூல் தொகுக்கப்பட்டமை |
| 4. யாழ்ப்பாணம் | D - ஆரியச் சக்கரவர்த்தி இலங்கையை ஆக்கிரமித்து தந்ததாதுவை எடுத்துச் சென்றமை |

(1) ADCB (2) BCDA (3) DBAC (4) DCAB

**21.** யாழ்ப்பாண இராச்சியம் தொடர்பாகப் **பொருத்தமற்ற** கூற்று எது?
(1) அங்கு ஆட்சியாளர் வம்சம் 'நாயக்கர்' அரச வம்சமாகும்
(2) யாழ்ப்பாண இராச்சியத்தின் தலைநகர் நல்லூர் ஆகும்.
(3) இங்கு கண்டி இராசதானியைப் போன்ற பௌதிக சூழல் இல்லை.
(4) இராசரட்டை நாகரிகம் வீழ்ச்சியுற்ற பின்னரே யாழ்ப்பாண இராச்சியம் தோன்றியது.

Department of Examinations - Sri Lanka


Download all Past Papers>> https://bookbeekid.com/resource/past-papers/

**22.** பின்வருவனவற்றுள் இந்து சமுத்திர வலயத்தில் பிரான்சியருக்கும் ஆங்கிலேயருக்கும் இடையிலான ஆதிக்கப் போட்டியில் இலங்கை முக்கியத்துவம் பெற்றதற்கான காரணம் யாது?
(1) திருகோணமலைத் துறைமுகத்தைப் பெறுதல்
(2) தங்கள் சமயத்தைப் பரப்புதல்
(3) வாசனைத் திரவியங்கள் போன்ற வியாபாரப் பொருட்களைப் பெறுதல்
(4) பெருந்தோட்டப் பயிர்ச்செய்கைக்குப் பொருத்தமான காணிகளைப் பெறுதல்

**23.** இலங்கையின் கரையோரப் பிரதேசங்களிலிருந்து போர்த்துக்கேயரை வெளியேற்றுவதில் கோட்டை ஆட்சியாளர்கள் தோல்வியடைந்தமைக்கான பிரதான காரணம்,
(1) கோட்டை ஆட்சியாளர்களிடம் நிலவிய ஒற்றுமையின்மை
(2) சிங்கள பிரதானிமார் சிலர் போர்த்துக்கேயருக்குச் சார்பாகச் செயற்பட்டமை
(3) கோட்டை ஆட்சியாளர்களிடம் பலம் வாய்ந்த கடற்படை இல்லாதிருந்தமை.
(4) கரையோரப் பிரதேசத்தின் மக்கள் போர்த்துக்கேயருக்கு உதவி புரிந்தமை

**24.** கி.பி. 1815 இல் கண்டியைக் கைப்பற்றுவதற்கு ஆளுநர் பிரௌண்றிக்குப் பல்வேறு உபாயங்கள் மூலம் தகவல்களை வழங்கிய நபர்
(1) மக்டோவல் (2) றொபேட் அன்ட்ரூஸ் (3) மேஜர் ஹுக் (4) ஜோன் டொயிலி

**25.** நிரல் **I** இல் குறிப்பிடப்பட்டுள்ள எண்ணக்கரு ஒழுங்குமுறைக்கமைய நிரல் **II** இல் தரப்பட்டுள்ள தகவல்களைச் சரியாகப் பொருத்தும் போது வரும் விடையைத் தெரிவு செய்க.

| நிரல் I | நிரல் II |
|---|---|
| 1. சமவுடைமை | A - மூலதன முதலீட்டினால் உச்ச லாபத்தைப் பெறுதல் |
| 2. முதலாளித்துவம் | B - சமுதாயத்தின் செல்வம் தொடர்பான பொது உரிமை அனைத்துப் பிரசைகளுக்கும் உரியது. |
| 3. அரச தலையிடாக் கொள்கை | C - பொருளாதார நடவடிக்கைகளில் அரசு குறைந்தபட்ச அளவில் தலையிடுதல் |
| | D - குடியேற்ற நாடுகளின் செல்வத்தைத் தாய்நாட்டின் நன்மைக்குப் பயன்படுத்தல் |

(1) ABC (2) BAC (3) BDA (4) DAB

**26.** ஐரோப்பாவில் மறுமலர்ச்சிக் காலத்தில் அரசியல் துறையில் நிகழ்ந்த முக்கியமான மாற்றம்
(1) பிரபுக்களின் ஆதிக்கம் வளர்ச்சி அடைந்தமை
(2) பிரதேச அரசுகளுக்குப் பதிலாக தேசிய அரசுகள் தோன்றியமை
(3) அரசனின் அதிகாரங்கள் வரையறுக்கப்பட்டமை
(4) குடியேற்றங்கள் அமைக்கப்பட்டமை

**27.** பின்வரும் எந்த விடயம் தொடர்பாக ஜோன் வைகிளிப், ஜோன் ஹஸ், இராஸ்மஸ் மார்ட்டின் லூதர் ஆகியோர் பிரசித்தி பெற்றனர்?
(1) மொழி, இலக்கியம் என்பவற்றின் மறுமலர்ச்சிக்கு ஆற்றிய சேவை
(2) உரோமன் கத்தோலிக்க திருச்சபையின் செயற்பாடுகளை விமர்சனம் செய்தமை
(3) சித்திரக் கலையின் முன்னேற்றத்திற்கு பங்களிப்பு வழங்கியமை
(4) புவி பற்றிய புதிய கருத்துகளை முன்வைத்தமை

**28.** கண்டி இராச்சிய காலத்தில் 'பரவேனிகம்' என்ற பெயரால் இனங்காணப்பட்டது,
(1) விகாரைகளுக்காக வழங்கப்பட்ட காணி
(2) அரச மாளிகையின் பயன்பாட்டுக்காக ஒதுக்கப்பட்ட இடம்
(3) கிராம வாசிகள் பரம்பரையாக அனுபவித்து வரும் காணி
(4) ரதள பிரதானிமார் செய்த சேவைக்காக வழங்கப்பட்ட காணி


Download all Past Papers > https://bookbeekid.com/resource/past-papers/

**29.** பின்வருவனவற்றுள் 'மக்களின் இறைமை' என்ற கோட்பாட்டின் கருத்து அடங்கிய கூற்று எது?
(1) மக்கள் வாக்குரிமையினால் ஆட்சியாளர்களை நியமிக்கவும் நீக்கவும் உள்ள உரிமை
(2) அடிப்படை மனித உரிமைகள் மீறப்படும்போது நிவாரணம் பெறுவதற்கான உரிமை
(3) தாம் விரும்பும் அரசியல் கருத்துகளுக்கு அமைய செயற்பாடுகளைச் செய்யும் சுதந்திரம்.
(4) ஊடகங்கள் மூலம் அரசை விமர்சிக்கும் உரிமை

● பின்வரும் A தொடக்கம் E வரையிலான தகவல்களின் அடிப்படையில் **30** ஆம் **31** ஆம் வினாக்களுக்கு விடை தருக.
A - அரசின் வர்த்தக ஏகபோக முறை அகற்றப்பட்டமை
B - இரு சபைகள் கொண்ட பாராளுமன்றம்
C - பிரித்தானிய அரசன் / அரசி இலங்கை அரச தலைமைத்துவத்திலிருந்து நீக்கப்படுதல்.
D - நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பதவி
E - குறைகேள் அதிகாரிப் (ஓம்புட்ஸ்மன்) பதவி தாபிக்கப்படுதல்

**30.** 1948 சோல்பரி அரசியல் யாப்பு மற்றும் 1972 குடியரசு அரசியல் யாப்பு தொடர்பான தகவல்களை உள்ளடக்கிய விடை யாது?
(1) A உம் B உம் (2) B உம் C உம்
(3) C உம் D உம் (4) D உம் E உம்

**31.** 1978 புதிய அரசியல் யாப்பில் குறிப்பிடப்படும் தகவல்களைக் காட்டும் விடை எது?
(1) A உம் B உம் (2) B உம் C உம்
(3) C உம் D உம் (4) D உம் E உம்

● பின்வரும் அட்டவணையில் **A** தொடக்கம் **F** வரை தரப்பட்டுள்ள தகவல்களை ஆதாரமாகக் கொண்டு **32** ஆம் வினாவுக்கு விடை தருக.

| நாடு | நிகழ்வு | விளைவு |
|---|---|---|
| A. ஜப்பான் | C. லூசிடானியா கப்பலை மூழ்கடித்தல் | E. சர்வதேச சங்கம் தோற்றம் பெறுதல் |
| B. ஜேர்மனி | D. பேர்ள் துறைமுகத்தைத் தாக்குதல் | F. அணுகுண்டு வீசப்படுதல் |

**32.** முதலாம் உலக மகா யுத்தத்துக்குரிய தகவல்கள் அடங்கிய விடை எது?
(1) A C E (2) A C F (3) B C E (4) B D F

**33.** பின்வருவனவற்றுள் இரண்டாம் உலக மகா யுத்தம் முடிவடைவதில் தாக்கம் செலுத்திய தீர்மானம் மிக்க சம்பவம் எது?
(1) இத்தாலியின் அரச தலைவர் கொலை செய்யப்பட்டமை
(2) ஐக்கிய அமெரிக்க அரசுகள் நேசநாடுகளின் அணியில் சேர்ந்தமை
(3) ஜெர்மனிய விமானப்படை பிரித்தானியரால் தோற்கடிக்கப்பட்டமை
(4) ஜப்பானின் ஹிரோஷிமா, நாகசாகி நகரங்கள் மீது அணுகுண்டு தாக்குதல் நடத்தப்பட்டமை.

**34.** ஐக்கிய நாடுகள் சாசனத்தைத் தயாரிப்பதற்கு அடிப்படையாக அமைந்தது
(1) டெஹரான் மகாநாடு (2) அத்லாந்திக் மகாநாடு
(3) மொஸ்கோ மகாநாடு (4) சன் பிரான்சிஸ்கோ மகாநாடு

Department of Examinations - Sri Lanka


Download all Past Papers >> https://bookbeekid.com/resource/past-papers/

● கீழே தரப்பட்டுள்ள A, B என்ற கூற்றுகளின் அடிப்படையில் **35** ஆம் வினாவுக்கு விடை தருக.

A - "பிரதிநிதித்துவம் இன்றேல் வரியும் இல்லை"

B - "இந்த சந்தர்ப்பத்தில் நாங்கள் அதிகாரத்தைக் கைப்பற்றாதுவிட்டால் வரலாறு எங்களை மன்னிக்க மாட்டாது."

**35.** அமெரிக்க சுதந்திரப் போர் தொடர்பாக

(1) A உம் B உம் உண்மையானவை

(2) A உம் B உம் பொய்யானவை

(3) A உண்மையானது என்பதோடு B பொய்யானது.

(4) A பொய்யானது என்பதுடன் B உண்மையானது.

**36.** பின்வரும் கூற்றுகளில் ரஷ்யப் புரட்சி தொடர்பான **பிழையான** கூற்று எது?

(1) புரட்சி ஆரம்பமான காலப்பகுதியில் விவசாயிகள் பல்வேறு இன்னல்களுக்கு முகம் கொடுத்தனர்.

(2) சமவுடைமைக் கொள்கை உலகம் முழுவதும் பரவுதல் ரஷ்யப் புரட்சியின் விளைவாகும்.

(3) மக்களிடமிருந்து அதிகளவு வரிகளை வசூலித்த சார் ஆட்சியாளர்கள் ஊழல் நிறைந்தவர்கள்

(4) அக்காலத்தில் ரஷ்யாவில் முதலாளித்துவ பொருளாதார முறைமை நிலவியது.

● கீழே தரப்பட்டுள்ள A, B, C, D என்பவற்றில் சோடிக் கூற்றுகள் காணப்படுகின்றன. ஒவ்வொரு சோடியிலும் முதலாம், இரண்டாம் கூற்றுகளுக்கிடையிலான தொடர்பை அவதானித்து **37** தொடக்கம் **39** வரையான வினாக்களுக்கு விடை தருக.

A - 1. பனிப்போர்
    2. இரகசிய உளவு சேவை

B - 1. அணிசேரா நாடுகளின் மகாநாடு
    2. வின்ஸ்ரன் சேர்ச்சில்

C - 1. யூத இனத்தவர்கள்
    2. நாஸி படைகள்

D - 1. பிரான்ஸினதும் பிரித்தானியாவினதும் ஏகாதிபத்தியம்
    2. இரண்டாம் உலக மகாயுத்தம்

**37.** முதலாவதின் செயற்பாட்டுக்கு இரண்டாவதில் விளைவைக் காட்டும் சோடி எது?

(1) A (2) B (3) C (4) D

**38.** முதலாவதுக்கும் இரண்டாவதுக்கும் இடையில் தொடர்பினைக் **காட்டாத** சோடி எது?

(1) A (2) B (3) C (4) D

**39.** முதலாவது வீழ்ச்சியடைவதில் இரண்டாவதின் தாக்கத்தைக் காட்டும் சோடி எது?

(1) A (2) B (3) C (4) D

**40.** சுயெஸ் கால்வாயைப் பொதுவுடைமையாக்குதல், அணி சேரா நாடுகளின் அமைப்பு தாபிக்கப்படுவதற்கு உதவுதல் என்பன காரணமாக உலகின் கவனத்தை ஈர்த்த மக்கள் தலைவர்

(1) அப்துல் கமல் நாசர் (2) மஹீதீர் மொஹமட்

(3) ஜவஹர்லால் நேரு (4) மார்ஷல் டிட்டோ

* * *

Department of Examinations - Sri Lanka

Download all Past Papers >> https://bookbeekid.com/resource/past-papers/

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

රහස්‍යයි
அந்தரங்கமானது

## අ.පො.ස. (සා.පෙළ) විභාගය - 2020
## க.பொ.த. (சா.தர)ப் பரீட்சை - 2020

| විෂය අංකය<br>பாட இலக்கம் | 33 | විෂයය<br>பாடம் | வரலாறு |
|---|---|---|---|

### I පත්‍රය - පිළිතුරු
### I பத்திரம் - விடைகள்

| ප්‍රශ්න අංකය<br>வினா இல. | පිළිතුරෙහි අංකය<br>விடை இல. | ප්‍රශ්න අංකය<br>வினா இல. | පිළිතුරෙහි අංකය<br>விடை இல. | ප්‍රශ්න අංකය<br>வினா இல. | පිළිතුරෙහි අංකය<br>விடை இல. | ප්‍රශ්න අංකය<br>வினா இல. | පිළිතුරෙහි අංකය<br>விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 1 | 11. | 3 | 21. | 1 | 31. | 4 |
| 02. | 3 | 12. | 3 | 22. | 1 | 32. | 3 |
| 03. | 4 | 13. | 1 | 23. | 3 | 33. | 4 |
| 04. | 2 | 14. | 1 | 24. | 4 | 34. | 4 |
| 05. | 3 | 15. | 3 | 25. | 2 | 35. | 3 |
| 06. | 2 | 16. | 2 | 26. | 2 | 36. | 4 |
| 07. | 1 | 17. | 4 | 27. | 2 | 37. | 1 |
| 08. | All | 18. | 3 | 28. | 3 | 38. | 2 |
| 09. | 3 | 19. | 3 | 29. | 1 | 39. | 4 |
| 10. | 2 | 20. | 4 | 30. | 2 | 40. | 1 |

Department of Examinations - Sri Lanka

විශේෂ උපදෙස් } එක් පිළිතුරකට ලකුණු **01** බැගින්
விசேட அறிவுறுத்தல் } ஒரு சரியான விடைக்கு **01** புள்ளி வீதம்

මුළු ලකුණු / மொத்தப் புள்ளிகள் **01 × 40 = 40**

---

පහත නිදසුනෙහි දැක්වෙන පරිදි බහුවරණ උත්තරපත්‍රයේ අවසාන තීරුවේ ලකුණු ඇතුළත් කරන්න.
கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் உதாரணத்திற்கு அமைய பல்தேர்வு வினாக்களுக்குரிய புள்ளிகளை பல்தேர்வு வினாப்பத்திரத்தின் இறுதியில் பதிக.

නිවැරදි පිළිතුරු සංඛ්‍යාව / சரியான விடைகளின் தொகை: **25/40**

I පත්‍රයේ මුළු ලකුණු / பத்திரம் I இன் மொத்தப்புள்ளி: **25/40**


Download all Past Papers>> https://bookbeekid.com/resource/past-papers/

# வரலாறு II

## பகுதி I

**1. (அ) (i)** கீழே தரப்பட்டுள்ள வரலாற்று இடங்கள் **அனைத்தையும்** வழங்கப்பட்டுள்ள இலங்கைப் புறவுருவப்படத்தில் குறித்துப் பெயரிடுக.

மாதுறு ஓயா, செங்கடகல, நல்லூர், லங்காபட்டினம், மிகுந்தலை, குருணாகல், காஜரகாம, இரணைமடுக் குளம், கொத்மலை நீர்த்தேக்கம், மன்னார் தீவு, களனி, ஹோட்டன் சமவெளி (12 புள்ளிகள்)

**(ii)** கீழே தரப்பட்டுள்ள வரலாற்று இடங்கள் **அனைத்தையும்** வழங்கப்பட்டுள்ள பகுதி உலகப் புறவுருவப்படத்தில் குறித்துப் பெயரிடுக.

ஜாவா தீவு, மத்திய தரைக்கடல், கோவா, கொரியா குடாநாடு, மதராஸ், வெனிஸ் (06 புள்ளிகள்)

**(ஆ) (i)** கீழே *A, B, C, D* எனத் தரப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளை **ஒழுங்குமுறைப்படி** உங்கள் விடைத்தாளில் எழுதுக.

*A* - நாடுகாண் பயணங்களுக்கு ஆதரவு வழங்கிய போர்த்துக்கேய அரச வம்சத்தவர் ஒருவரின் பெயர் தருக.

*B* - இரண்டாம் உலகப் போரினை முடிவடையச் செய்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட ஜப்பானிய பேரரசனின் பெயர் தருக.

*C* - முதலாம் விஜயபாகு மன்னன் பற்றிய தகவல்களை வழங்கும் செப்பு சாசனம் எது?

*D* - இலங்கையில் 'இலவசக் கல்வியின் தந்தை' என்ற புகழுக்குரிய மந்திரியின் பெயர் தருக. (04 புள்ளிகள்)

● *A, B* என்பவற்றில் காட்டப்பட்டுள்ள படங்களை அவதானித்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளை வினா இலக்க **ஒழுங்குமுறைப்படி** உங்கள் விடைத்தாளில் எழுதுக.

**(ii)** 1. படம் *A* இல் காட்டப்பட்டுள்ள ஓவியம் எங்கு வரையப்பட்டுள்ளது?

2. இதனைச் செய்வித்தவராக கருதப்படும் மன்னனின் பெயர் தருக.

3. படத்தில் காட்டப்பட்டுள்ள பெண்கள் அணிந்துள்ள ஆபரணங்களில் **ஒன்றினைக்** குறிப்பிடுக.

4. இந்த ஓவியங்களைப் பார்த்தவர்கள் தமது கருத்துக்களைக் குறிப்பிட்டுள்ள நிருமாணிப்பின் பெயர் தருக. (04 புள்ளிகள்)



*A*

**(iii)** 1. *B* படத்தில் காட்டப்பட்டுள்ள நபரின் பெயர் யாது?

2. இரண்டாம் உலக மகா–யுத்தத்தின்போது இவர் எந்த நாட்டின் அரச தலைவராக இருந்தார்?

3. இவருடைய அரசியல் கோட்பாட்டுக்கு வழங்கப்படும் பெயர் யாது?

4. இவரின் போர் வலிமையினால் கைப்பற்றிய ஆபிரிக்க நாடு ஒன்றின் பெயர் தருக.

(04 புள்ளிகள்)



*B*

Department of Examinations - Sri Lanka



Download all Past Papers>> https://bookbeekid.com/resource/past-papers/

முழுப் பதிப்புரிமையுடையது ]All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka


**33 STE II**


**අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2020**
**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2020**
**General Certificate of Education (Ord. Level) Examination, 2020**

**ඉතිහාසය II**
**வரலாறு II**
**History II**

1. (අ) (i)
1. (அ) (i)
1. (a) (i)

විභාග අංකය / சுட்டெண் / Index No. ........................






Department of Examinations - Sri Lanka

1. (අ) (ii)
1. (அ) (ii)
1. (a) (ii)


Download all Past Papers >> https://bookbeekid.com/resource/past-papers/

1. அ.

(i) இடம் குறித்தல் 1 × 2 = 12 புள்ளிகள்

(ii) இடம் குறித்தல் 1 × 6 = 06 புள்ளிகள்

ஆ.

(i) A – 4ஆம் ஹென்றி / ஹென்றி இளவரசன் / கடலோடி ஹென்றி

B – ஹிரோஹித்தோ

C – பனாகடுவ செப்புசாசனம்

D – C. W. W. கன்னங்கரா **(01 X 4 = 04 புள்ளிகள்)**

(ii) 1. சீகிரியா

2. 1 ஆம் காசியப்பன் / சிகிரிய காசியப்பன்

3. வளையல், தோடு, நெற்றிச்சுட்டி, கிரீடம், மாலை

4. கண்ணாடிச்சுவர் **(01 X 4 = 04 புள்ளிகள்)**

(iii) 1. முசோலினி / பெனிடோ முசோலினி

2. இத்தாலி

3. பாசிதவாதம்/ பாசிசம்

4. (எதியோப்பியா) அபிசீனியா **(01 X 04 = 4 புள்ளிகள்)**

Department of Examinations - Sri Lanka

## பகுதி II

**02. நோக்கம்**

வரலாறு கட்டியெழுப்பப்படுவதில் தொல்பொருள் மூலாதாரங்களில் நாணயங்களின் முக்கியத்துவமும் அவற்றைப் பாதுகாத்தல் தொடர்பான விடயங்களையும் முன்வைப்பர்

2. (i) புராதன காலத்தில் இலங்கையின் நாணயங்களை ஆக்குவதற்குப் பயன்படுத்தப்பட்ட **மூன்று** வகை உலோகங்களைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(ii) தொல்பொருள் அகழ்வுகளின்போது இந்நாட்டில் கண்டெடுக்கப்பட்ட வெளிநாட்டு நாணயங்களுக்குரிய **இரண்டு** நாடுகளின் பெயர்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(iii) வெளிநாட்டு வியாபாரத் தொடர்புகளை மேற்கொள்ளப்பயன்படுத்தப்பட்ட இலங்கையின் புராதன துறைமுகங்கள் **இரண்டின்** பெயர் தருக. (02 புள்ளிகள்)

(iv) வரலாற்றைக் கற்பதன் மூலாதாரமாக நாணயங்கள் முக்கியத்துவம் பெறும் முறையினை **இரண்டு** விடயங்கள் கொண்டு விவரிக்குக. (05 புள்ளிகள்)

(v) தொல்பொருளியல் சின்னங்களைப் பாதுகாப்பதின் முக்கியத்துவத்தினை **மூன்று** விடயங்களின் மூலம் விளக்குக. (06 புள்ளிகள்)

(i) – தங்கம்

– வெள்ளி

– செப்பு

**( 03 புள்ளிகள் )**


Download all Past Papers > https://bookbeekid.com/resource/past-papers/

(ii) - உரோம்
- சீனா
- இந்தியா (ஏதாவது இரண்டு விடை)

**(02 புள்ளிகள் )**

(iii) - ஜம்புகோளப்பட்டனம்
- மாதித்த
- கோகண்ண
- கொடவாய (தரம் 10 53ம் பக்க இலங்கைப்படம்)

**(02 புள்ளிகள் )**

(iv) - நாட்டின் பொருளாதார நிலையை அறிந்து கொள்ளல்
- அரசர்களின் செல்வச் செழிப்பும், அவர்களின் ஆட்சிமுறையையும், காலத்தையும் அறிந்து கொள்ளல்.
- அரசர்களின் ஆட்சி நிர்வாகப் பிரதேசங்களை அறிந்து கொள்ளல்
- உலோக தொழினுட்பம் பற்றிய அறிவைப் பெற்றுக் கொள்ளல்
- வெளிநாட்டு வர்த்தகம் தொடர்பான விடயங்களை அறிய முடிதல்

**(காரணி 02 புள்ளிகள், விளக்கம் 03 புள்ளிகள்)**

**(02 + 03 = 05 புள்ளிகள்)**

Department of Examinations - Sri Lanka

(v) - எமது நாட்டின் பாரம்பரிய உரிமைகளை எதிர்கால சந்ததியினருக்கு கையளித்தல்
- நாட்டின் தனித்துவத்தை அறிந்து கொள்ளல்
- பண்டைய சமூகத்தின் அரசியல், பொருளாதார, சமூக, கலாசாரம், சமயம் தொடர்பான நிலைமைகள் பற்றிய தகவல்களை அறிந்து கொள்ளல்
- வரலாற்று அறிவினைப் பெற்றுக் கொள்ளல்
- வெளிநாட்டு வர்த்தகம் தொடர்பான விடயங்களை அறிய முடிதல்

**(காரணி 03 புள்ளிகள், விளக்கம் 03 புள்ளிகள்)**

**(03 + 03 = 06 புள்ளிகள்)**


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

**03. நோக்கம்**

வரலாற்றுக்கு முற்பட்டகாலம், முன் வரலாற்றுக் கால மனிதனின் வாழ்க்கைக் கோலம், தொழினுட்ப அறிவு போன்றவற்றை இனங்கண்டு விளக்கிக் கூறுவார்.

3. (i) இந்த நாட்டில் அதிகளவு மழைவீழ்ச்சி நிகழ்ந்த புவியியல் காலப்பகுதி எது? (01 புள்ளி)

(ii) வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதன் பற்றிய தகவல்கள் கிடைத்துள்ள அம்பாந்தோட்டை மாவட்டத்திலுள்ள **இரண்டு** இடங்களின் பெயர் தருக. (02 புள்ளிகள்)

(iii) (a) வரலாற்றுக்கு முற்பட்ட மனிதன் தமது உணவைப் பெற்றுக்கொண்ட **இரண்டு** முறைகளைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(b) வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதன் உணவுக்காகப் பயன்படுத்திய **இரண்டு** தாவர உணவு வகைகளைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(iv) முன் வரலாற்றுக் காலத்தில் மனிதன் பயன்படுத்திய தொழினுட்ப அறிவு பற்றி உடரஞ்சாமடம் அருகிலான அகழ்வுகளிலிருந்து வெளிப்படுத்தப்பட்ட **இரண்டு** தகவல்களை ஆதாரமாகக் கொண்டு விவரிக்குக. (05 புள்ளிகள்)

(v) வசப மன்னன் ஆட்சிக் காலத்தில் பெருங் குளங்களைக் கட்ட ஆரம்பிப்பதற்குப் பின்னணியாக அமைந்த **மூன்று** காரணங்களை விளக்குக. (06 புள்ளிகள்)

(i) பிளைத்தோசின்யுகம் **( 01 புள்ளி )**

(ii)
- பதிராஜவெல
- மினிகாஹல் கந்த
- பூந்தல வெல்லேகங்கொட
- அலுகல்கே
- உடமல்ல

**(இவற்றில் இரண்டிற்கு, 02 புள்ளிகள் )**

(iii) A –
- வேட்டையாடல்
- அலைந்து திரிந்து உணவு சேகரித்தல்

**( 02 புள்ளிகள் )**

B –
- காட்டு வாழை
- காட்டுப் பலா (ஆசனிப் பலா)
- காட்டுப் பாக்கு
- வள்ளிக் கிழங்கு
- கித்துள் விதை
- கிழங்கு வகை
- கொடி வகை

**( 02 புள்ளிகள் )**

(iv)
- வனைதல் சில்லைப் பயன்படுத்தி மட்பாண்டம் தயாரிக்கப்பட்டது.
- மடக்கு – மட்பாண்டங்களுக்கு வர்ணம் தீட்டப்பட்டது
- நிலத்துக்கு செங்குத்தாக சுவர் அமைத்தமை
- வீடுகள் கீழிறங்காமல் இருப்பதற்கு கற்களைப் பதித்து நிலத்தை தயார் செய்தல்
- களி மண்ணினாலான மணிகள் செய்யும் தொழினுட்பம் காணப்பட்டது.
- உலோகப் பாவனை தொடர்பான அறிவு காணப்பட்டது.

**(02 + 03 = 05 புள்ளிகள்)**

Department of Examinations - Sri Lanka


Download all Past Papers >> https://bookbeekid.com/resource/past-papers/

(v) – அதிகரிக்கும் சனத்தொகைக் கேற்ப உணவுற்பத்தியை அதிகரிக்க வேண்டிய தேவை ஏற்பட்டமை

– கிடைக்கின்ற மழைவீழ்ச்சியின் அளவு போதாமல் இருந்தமை

– நிச்சயமற்ற மழைவீழ்ச்சி நிலவியமை

– சர்வதேச நாடுகளின் கேள்விக்கேற்ப போதியளவு நெல்லுற்பத்தியை அதிகரிக்க வேண்டிய தேவை ஏற்பட்டமை

உ + ம் : இந்தியாவின் கிருஷ்ணா நதிப் பிரதேசத்தில் ஏற்பட்ட உணவுப் பற்றாக்குறை

**(காரணி 03 புள்ளிகள், விளக்கம் 03 புள்ளிகள்)**

**(03 + 03 = 06 புள்ளிகள்)**

**4. நோக்கம்**

அநுராதபுர, இரண்டாவது நகராக்கக் காலத்தில் முன்னெடுக்கப்பட்ட நீர்ப்பாசண அமைப்பு முறைகள் தொடர்பான தகவல்களை முன்வைப்பர்

4. (i) அனுராதபுரக் காலத்தில் பாரிய நீர்ப்பாசனத்திட்டங்களை அமைப்பதற்கு பயன்படுத்தப்பட்ட **மூன்று** ஆற்றுப்பள்ளத்தாக்குகளின் பெயர்களைத் தருக. (03 புள்ளிகள்)

(ii) பின்வரும் *A* தொடக்கம் *D* வரையிலான கூற்றுகளுக்குப் பொருத்தமான விடைகளை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிவுசெய்து **ஒழுங்குமுறைப்படி** எழுதுக.

*A* - அபயகிரி விகாரைக்குச் சொந்தமான கலை மற்றும் தொழினுட்பத்தில் உயர்தரம் கொண்ட ஆக்கமான பொய்கை

*B* - மின்னேரிய, கவுடுளு ஆகிய குளங்களுக்கு நீரைக் கொண்டு செல்வதற்கான கால்வாய்

*C* - குளத்தில் சேரும் சேற்றை வெளியேற்றக்கூடிய விதத்தில் குளக்கட்டின் கீழ்மட்டத்தில் அமைக்கப்பட்ட மடைக்கதவு

*D* - பிக்குமார்களின் போயாதின செயல்களுக்காக அமைக்கப்பட்ட மகாவிகாரைக்குரிய பல மாடிகளைக் கொண்ட கட்டிடம்

(லோவா மஹாபாய, சத்மஹல் பிரசாதய, அலைதாங்கி, ஈரக்கலிங்கல், எலஹர கால்வாய், அங்கமடில்ல கால்வாய், அத் பொய்கை, குட்டம் பொய்கை) (04 புள்ளிகள்)

(iii) சிறிய கிராமிய குளங்கள் தொகுதி (எல்லங்காவ) வரண்ட வலயத்தில் அமைத்தல் மூலம் நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட **இரண்டு** நோக்கங்களை விவரிக்குக. (05 புள்ளிகள்)

(iv) இரண்டாம் நகரமயமாக்க காலத்தில் பாரிய நீர்ப்பாசனத் தொகுதிகள் **அமைக்கப்படாமையில்** செல்வாக்குச் செலுத்திய **மூன்று** காரணிகளை விளக்குக. (06 புள்ளிகள்)

(i) – மல்வத்து ஓயா

– கலா ஓயா

– யான் ஓயா

– மகாவலி கங்கை

– மோதரகம் ஆறு

– மாதுறு ஓயா

– மகா ஓயா

**(ஏதாவது 3 இற்கு, 03 புள்ளிகள் )**

Department of Examinations - Sri Lanka


Download all Past Papers >> https://bookbeekid.com/resource/past-papers/

(ii) A – குட்டம் பொய்கை

B – எலஹர கால்வாய்

C – ஈரக்கலிங்கல்

D – லோவமகாபாய

**( 04 புள்ளிகள் )**

(iii) – நீரை சேகரித்து விவசாயத்துக்கு பயன்படுத்தல்

– நீரை முடிந்தளவு பிரயோசனப்படுத்திக் கொள்ளல்

– புவியின் நீர் மட்டத்தைப் பாதுகாத்தல்

– குளங்களுக்கிடையிலுள்ள கால்வாயில் எந்நேரமும் நீரைப் பாயவிடுவதன் மூலம் இருபக்க நிலங்களினதும் ஈரத்தனமையைப் பாதுகாத்தல்

**(காரணி 02 புள்ளிகள், விளக்கம் 03 புள்ளிகள்)**

**(02 + 03 = 05 புள்ளிகள்)**

(iv) – அரச அனுசரணை கிடைக்காமை

– அரசைப் பாதுகாப்பதில் கூடிய கவனம் செலுத்தியமை

– வெளிநாட்டு வர்த்தகத்தில் கூடிய கவனம் செலுத்தப்பட்டமை

– இரண்டாவது நகராக்க காலத்தில் ஈரவலயத்தில் போதிய மழைவீழ்ச்சி கிடைத்தமையால் பாரிய குளங்கள் அமைக்க வேண்டிய தேவை ஏற்படவில்லை

– போதியளவு உணவு கிடைத்தமை

– பாரிய குளங்களை அமைப்பதற்கு தரைத்தோற்றம் பொருத்தமற்றதாக காணப்பட்டமை

**(03 + 03 = 06 புள்ளிகள்)**

Department of Examinations - Sri Lanka


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

**05. நோக்கம்**

கண்டி இராச்சியத்தின் ஆட்சியாளர்கள், அங்கு நிலவிய விவசாய நடவடிக்கைகள் தொடர்பான விவரங்களை எடுத்துக் கூறுவர்

5. (i) விஜயபாகு கொலையுடன் (கொள்ளய) தொடர்புடைய **மூன்று** இளவரசர்களின் பெயர் தருக. (03 புள்ளிகள்)

(ii) கண்டி இராச்சியம் தொடர்பான பின்வரும் $A, B, C, D$ என்ற கூற்றுகளுக்குப் பொருத்தமான விடையினை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிவுசெய்து **ஒழுங்குமுறைப்படி** எழுதுக.

*A* - அரசியல் ரீதியில் மன்னனுக்கு அடுத்து இரண்டாவதாக உள்ள மஹுவாசல அதிகாரி

*B* - தந்ததாதுவினதும் தலதா மாளிகையினதும் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான நபர்

*C* - முதலாவது சங்கராஜா பதவி

*D* - கண்டி இராச்சியத்துக்கு உரித்தாக இருந்த தற்போதைய வடமத்திய மாகாணத்தின் அளவை ஒத்த பிரதேசம்

(நுவரகலாவிய, தமன்கடுவ, ஹிக்கடுவ ஸ்ரீ சுமங்கல தேரர், வெலிவிற்ற ஸ்ரீ சரணங்கார தேரர், பஸ்நாயக்க நிலமே, தியவடன நிலமே, மகா திசாவ, பிரதானி) (04 புள்ளிகள்)

(iii) கண்டி இராச்சியத்தின் விவசாய நடவடிக்கைகள் ஒழுங்கமைக்கப்பட்டிருந்த விதத்தினை **இரண்டு** விடயங்கள் கொண்டு விளக்குக. (05 புள்ளிகள்)

(iv) முதலாம் விமலதர்மசூரிய மன்னன் கண்டி இராச்சியத்தின் சிறந்த ஆட்சியாளன் என்பதை **மூன்று** காரணிகள் கொண்டு விளக்குக. (06 புள்ளிகள்)

(i) - மாயாதுன்னை
- புவனேகபாகு
- றைகம பண்டார

**( 03 புள்ளிகள் )**

(ii) A - பிரதானி
B - தியாவடன நிலமே
C - வெலிவிற்ற ஸ்ரீ சரணங்கரதேரர்
D - நுவரகாலாவிய

**( 04 புள்ளிகள் )**

(iii)
- நெல் விவசாயம் - படிக்கட்டு முறையிலான பயிர்ச் செய்கை
- வீட்டுத் தோட்டம் - பலா, தென்னை, பாக்கு, வெற்றிலை, சாதிக்காய், கராம்பு, பாக்கு, மரக்கறி, பழவகை
- சேனைப் பயிர் - மலைச் சாய்வுகளில் உழுந்து, குரக்கன், எள்ளு, சோளம், தினை, சாமை
- விலங்கு வளர்ப்பு - மாடு, ஆடு, கோழி (பால் பெறுவதற்காகவும், இறைச்சிக்காகவும், விவசாயத்திற்காகவும்)

**(02 + 03 = 05 புள்ளிகள்)**

Department of Examinations - Sri Lanka


Download all Past Papers>> https://bookbeekid.com/resource/past-papers/

(iv) **அரசியல்**
- போர்த்துக்கேயரின் ஆதிக்கத்திலிருந்து கண்டி இராச்சியத்தைப் பாதுகாத்துக் கொண்டமை
- சீதாவாக்கை இராச்சியத்தின் ஆக்கிரமிப்பை தோல்வியடையச் செய்தமை

**பொருளாதாரம்**
- விவசாயத்தை விருத்தியடையச் செய்தமை
- பருத்திப் பயிர்ச் செய்கைக்கு உதவி புரிந்தமை
- கொத்மலையிலும் வலப்பனையிலும் இரும்புருக்கு கைத்தொழிலை முன்னேற்ற நடவடிக்கை எடுத்தமை
- வெடி மருந்து தேவைக்கான உப்பு உற்பத்திக் கைத்தொழிலை வளர்த்தமை

**சமயம்**
- தெல் கமுவ விகாரையில் வைக்கப்பட்டிருந்த புனித தந்ததாதுவை கண்டியில் பிரதிஷ்டை செய்தமை
- பர்மாவிலிருந்து உப சம்பதாவை கொண்டு வந்தமை
- பழைய விகாரைகளைப் புனரமைப்புச் செய்தமை

  உ + ம் : லங்காதிலக, கடலாதெனிய, ரிதி விகாரை

**(03 + 03 = 06 புள்ளிகள்)**

Department of Examinations - Sri Lanka

**06. நோக்கம்**

ஒல்லாந்தர், பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் அறிமுகப் படுத்தப்பட்ட பெருந்தோட்டப் பயிர்கள் பற்றியும் அவற்றின் விளைவுகள் பற்றியும் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான விபரங்களை முன்வைப்பர்.

**6.** (i) ஒல்லாந்தரினால் முதன்முறையாக இந்நாட்டில் பெருந்தோட்டப் பயிர்செய்கையாக ஆரம்பிக்கப்பட்ட பயிர் எது? (01 புள்ளி)

(ii) பிரித்தானியரால் மலைநாட்டில் ஆரம்பிக்கப்பட்டது எனினும் பின்னர் தோல்வி கண்ட **இரண்டு** பயிர்ச்செய்கைகளைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(iii) (a) பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையை ஆரம்பிக்கும்போது முயற்சியாளர்கள் எதிர்நோக்க வேண்டி நேரிட்ட முக்கிய **இரண்டு** சவால்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(b) அந்த சவால்களைத் தீர்ப்பதற்கு பின்பற்றப்பட்ட **இரண்டு** வழிமுறைகளைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(iv) இந்நாட்டில் விவசாயக் குடியேற்றங்களை ஆரம்பிப்பதற்கு வரண்ட வலயம் விசேடமாகத் தெரிவுசெய்யப்பட்டமையில் செல்வாக்குச் செலுத்திய **இரண்டு** காரணிகளைை விளக்குக. (05 புள்ளிகள்)

(v) மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் **மூன்று** நோக்கங்களை விளக்குக. (06 புள்ளிகள்)

(i) – கறுவா **( 01 புள்ளி )**

(ii) – கோப்பி
- சிங்கோனா
- கொக்கோ **( 02 புள்ளிகள் )**


Download all Past Papers>> https://bookbeekid.com/resource/past-papers/

(iii) A – பெருந்தோட்டப் பயிர் செய்கைக்கு தேவையான நிலத்தைப் பெற்றுக் கொள்ளல்

– தொழிலாளர்களைப் பெற்றுக் கொள்ளல்

**( 02 புள்ளிகள் )**

B – அரச காணி விற்பனைக் கொள்கையை நடைமுறைப்படுத்தியமை

– சம்பளத்திற்கு தொழிலாளர்களைப் பெற்றுக் கொண்டமை

**( 02 புள்ளிகள் )**

(iv) – ஈர வலயத்தில் அதிகரித்துச் செல்லும் சனத்தொகைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணலும், வேலையில்லாப் பிரச்சினையைத் தீர்த்தலும்.

– உணவு உற்பத்தியைப் பெருக்குதல்

– உலர் வலயத்தில் உள்ள புராதன குளங்கள், கால்வாய்களையும் புனரமைப்புச் செய்து நிலத்தைப் பொருளாதார அபிவிருத்திக்குப் பயன்படுத்திக் கொள்ளல்

– ஈர வலயத்தில் உள்ள நிலப் பற்றாக்குறையைத் தீர்த்து நில உரிமையுள்ள விவசாய பரம்பரை ஒன்றினை உருவாக்குதல்

– உலர் வலயத்திலுள்ள விவசாயக் காணிகளுக்கு நிரந்தர நீர்ப்பாசன வசதியைக் கிடைக்கச் செய்தல்.

**(காரணி 02 புள்ளிகள், விளக்கம் 03 புள்ளிகள்)**

**(02 + 03 = 05 புள்ளிகள்)**

(v) – மின் உற்பத்தியை அதிகரித்தல்

– நிலமற்ற விவசாயிகளுக்கு காணிகளை பெற்றுக் கொடுத்து பயிர்ச் செய்கையை பரவலடையச் செய்தல்

– வெள்ளப் பெருக்கைக் கட்டுப்படுத்தல்

– தொழில் வாய்ப்புக்களை உருவாக்கல்

– நன்னீர் மீன் வளர்ப்பை விருத்தி செய்தல்

– உலர் வலயத்தில் பயிர்ச் செய்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தேவையான நிரந்தர நீர் வசதியை வழங்கல்.

**(03 + 03 = 06 புள்ளிகள்)**

Department of Examinations - Sri Lanka


Download all Past Papers>> https://bookbeekid.com/resource/past-papers/

**07. நோக்கம்**

இலங்கையில் காலத்திற்கு காலம் ஏற்படுத்தப்பட்ட அரசியல் யாப்புச் சீர்திருத்தங்கள் தொடர்பான விளக்கங்களை முன்வைப்பர்.

7. (i) பின்வரும் *A, B, C* என்பவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள சந்தர்ப்பங்களுடன் தொடர்புடைய தனிநபர்களின் பெயர்களை **ஒழுங்குமுறைப்படி** எழுதுக.

*A* - இலங்கையின் முதலாவது பிரித்தானிய ஆளுநர்

*B* - 1818 ஆம் ஆண்டில் கண்டியில் சுதந்திரப் போராட்டம் நிலவிய காலத்தில் இந்நாட்டின் ஆளுநர்

*C* - 1848 ஆம் ஆண்டு சுதந்திரப் போராட்ட காலத்தில் இந்நாட்டின் ஆளுநர் (03 புள்ளிகள்)

(ii) (a) குடியேற்ற நாடுகளுக்குப் பொறுப்பான பொதுச் செயலாளர் கோல்புறூக் ஆணைக் குழுவினரை இலங்கைக்கு அனுப்புவதற்கு அடிப்படையான காரணத்தைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(b) ஆளுநரின் அதிகாரங்களைக் குறைப்பதற்கு கோல்புறூக் ஆணைக்குழு செய்த சிபார்சு யாது? (02 புள்ளிகள்)

(iii) டொனமூர் அரசியல்முறையின் மூலம் இலங்கை மக்கள் பெற்ற சனநாயக உரிமையைக் குறிப்பிடும்போது அதன் மூலம் இலங்கை மக்களுக்கு ஏற்பட்ட **இரண்டு** அனுகூலங்களை விவரிக்குக. (05 புள்ளிகள்)

(iv) 1978 அரசியல் சீர்திருத்தத்துக்கு உரிய பின்வரும் தலைப்புகளில் **இரண்டினைத்** தெரிவுசெய்து சிறுகுறிப்பு எழுதுக.

*A* - ஜனாதிபதித் தேர்தல்

*B* - விகிதாசாரப் பிரதிநிதித்துவமுறை

*C* - பொதுசன அபிப்பிராயத் தேர்தல் (06 புள்ளிகள்)

Department of Examinations - Sri Lanka

(i) A – பிரட்றிக் நோர்த்

B – றொபேட் பிறவுண்றிக்

C – றொறிங்ரன் பிரபு

**( 03 புள்ளிகள் )**

(ii) (a) – அரசின் வருமானத்தை விட செலவு அதிகமாகக் காணப்பட்டமை தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக

– நீதி மற்றும் சட்ட நடவடிக்கை தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பித்தல்

**( 02 புள்ளிகள் )**

(b) – சட்டவாக்க கழகமும், சட்ட நிர்வாகக் கழகமும் அமைக்கப்பட்டமை

**( 02 புள்ளிகள் )**

(iii) – சர்வசன வாக்குரிமை
வாக்குரிமையால் மக்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்ய வாய்ப்புக் கிடைத்தமை.

– மக்களின் அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்தல்
விவசாயம்
கல்வி
சுகாதாரம்
போக்குவரத்து

**(காரணி 02 புள்ளிகள், விளக்கம் 03 புள்ளிகள்)**


Download all Past Papers > https://bookbeekid.com/resource/past-papers/

(iv) A **ஜனாதிபதித் தேர்தல்**

- நாடு முழுவதும் ஒரே தேர்தல் தொகுதியாகக் கணிக்கப்பட்டு தேர்தல் நடைபெறும்
- ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுபவர் அளிக்கப்பட்ட வாக்குகளில் 50 வீதத்திற்கு அதிகமான வாக்குகளைப் பெற வேண்டும்.
- பதவிக் காலம் ஆறு வருடங்கள்
- பதவிக் காலத்தில் நான்கு வருடங்கள் முடிவடைந்த பின்னர் இரண்டாவது தடவையாக மக்கள் ஆணையைக் கோர முடியும்

B **விகிதாசாரப் பிரதிநிதித்துவம்**

- இலங்கையருக்கு புதிய தேர்தல் முறை அறிமுகமாகியது
- பாராளுமன்றம், மாகாண சபை, உள்ளூராட்சி சபைகளுக்கான அங்கத்தவர்களைத் தெரிவு செய்வதற்கு இம்முறை பயன்படுத்தப்பட்டது.
- அங்கத்தவர்கள் ஒரு குழுவாகத் தேர்தலில் போட்டியிடுவர்.
- வாக்காளர்கள் கட்சிக்கு ஒரு வாக்கினை வழங்கி தேர்தலில் போட்டியிடும் அங்கத்தவருக்கு ஒரு விருப்பு வாக்கினை அளிக்க வேண்டும்.
- கட்சிகள் பெறுகின்ற வாக்குகளின் விகிதத்திற்கு ஏற்ப ஆசனங்கள் தீர்மானிக்கப்படும்

Department of Examinations - Sri Lanka

C **பொதுசன அபிப்பிராய தேர்தல்**

- தேசிய முக்கியத்துவம் வாய்ந்த ஒரு விடயத்தில் நேரடியாக மக்கள் ஆணையைப் பெற்றுக் கொள்ளும் ஒரு முறை
- 1982 இல் இந் நாட்டிற்கு பொதுசன அபிப்பிராயத் தேர்தல் நடாத்திய அனுபவம் கிடைக்கப் பெற்றது.
- வாக்காளர்கள் தமது விருப்பை ஆம் / இல்லை எனத் தெரிவிப்பர்.
- நாடு முழுவதும் ஒரு தேர்தல் தொகுதியாகக் கணிக்கப்படும்.
- பொது சன அபிப்பிராயத் தேர்தலில் முன்வைக்கப்படும் விடயம் ஒன்று வாக்காளர்களால் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு அறுதிப் பெரும் பான்மையை (50% மேல்)ப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

**(ஒவ்வொரு தலைப்பிற்கும் குறைந்தது இரண்டு விடயங்கள் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்)**

**(03 X 2 = 06 புள்ளிகள்)**


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

## பகுதி III

### 08. நோக்கம்

ஐரோப்பாவில் மறுமலர்ச்சிக் காலத்தில்தோற்றம் பெற்ற வர்த்தக நகரங்கள், கலைப்படைப்புக்கள், நாடு காண் பயணங்கள் தொடர்பான விளக்கங்கள் பற்றிய தகவல்களை எடுத்துக் கூறுவர்.

**8.** (i) கி.பி. 1453 இல் துருக்கியரால் கைப்பற்றப்பட்ட கிரேக்க உரோம அறிஞர்கள் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த நகரம் எது? (01 புள்ளி)

(ii) வியாபார வர்த்தக நடவடிக்கைகள் காரணமாகப் பிரசித்தி பெற்றிருந்த **இரண்டு** இத்தாலிய நகரங்களின் பெயர் தருக. (02 புள்ளிகள்)

(iii) (a) மறுமலர்ச்சிக் காலத்தில் கட்டடக் கலைத் துறையின் **இரண்டு** விசேட பண்புகளைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(b) மறுமலர்ச்சிக் காலத்தில் அகிலம் தொடர்பாக முன்வைக்கப்பட்ட புதிய கருத்துகள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(iv) மறுமலர்ச்சிக் காலத்தில் இத்தாலியில் தோன்றிய சித்திரம் மற்றும் சிற்பம் ஆகிய கலைகள் ஒவ்வொன்றினதும் **இரண்டு** சிறப்பம்சங்களை உதாரணங்களுடன் விவரிக்குக. (05 புள்ளிகள்)

(v) நாடுகாண் பயணங்கள் காரணமாக உலகில் ஏற்பட்ட அரசியல் மாற்றம் மற்றும் பொருளாதார மாற்றம் **ஒவ்வொன்றைக்** குறிப்பிட்டு அவற்றை விளக்குக. (06 புள்ளிகள்)

(i) கொன்ஸ் தாந்தி நோபிள் **( 01 புள்ளி )**

(ii)
- வெனிஸ்
- ஜெனோவா
- உரோம்

**( 02 புள்ளிகள் )**

(iii) (a)
- வட்ட வடிவிலான வில் வளையம்
- அரை வட்ட சிகரம்
- உயர்ந்த தூண் **( 02 புள்ளிகள் )**

(b)
- புவி கோள வடிவமானது
- கோள்கள் சூரியனைச் சுற்றி வருதல்
- வியாழனைச் சூழ உப கோள்கள் உள்ளமை
- புவியீர்ப்பு சக்தியைக் கண்டறிந்தமை **( 02 புள்ளிகள் )**

(iv)
- சமயக் கருத்துக்களுக்கு முதலிடம் கொடுப்பதற்குப் பதிலாக லௌகீக தன்மைக்கு மாற்றமடைந்த கலைப்படைப்புக்கள் உருவாக்கப்பட்டன.
- செல்வந்தர்களின் உருவங்கள் சித்திரமாக வரையப்பட்டன.
- கலைப்படைப்புக்களை உருவாக்கியவர்களின் பெயர்களில் வெளிவரத் தொடங்கியது.
- பளிங்குக் கற்களில் சிற்பங்கள் செய்யப்பட்டது

**(காரணி 02 புள்ளிகள், விளக்கம் 03 புள்ளிகள்)**

**(02 + 03 = 05 புள்ளிகள்)**

Department of Examinations - Sri Lanka



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

(v) **அரசியல் மாற்றம்**

- ஆசிய, ஆபிரிக்க, அமெரிக்க கண்டங்களில் ஐரோப்பியரின் ஆதிக்கம் பரவியது.
- மேற்படி கண்டங்களிலுள்ள சில நாடுகள் ஐரோப்பிய இனத்தவரின் குடியேற்ற நாடுகளாக விளங்கின.
- புதிய நாடுகள் கண்டு பிடிக்கப்பட்டன.

**பொருளாதாரம்**

- குடியேற்ற நாடுகளின் வளங்களைப் பெற்றமை
- வர்த்தகம் விரிவடைந்தது.
- பணப்புழக்கம் அதிகரித்தது.
- வங்கிகள் தோற்றம் பெற்றது.
- வர்த்தக வகுப்பினர் தோற்றம் பெற்றனர்
- வர்த்தக நகரங்கள், வர்த்தக துறைமுகங்கள் வளர்ச்சியடைந்தது.

**(02 X 03 = 06 புள்ளிகள்)**

**09. நோக்கம்**

கைத் தொழில் புரட்சிக் காலத்தில் கண்டு பிடிப்புக்கள் நெசவுக் கைத்தொழில், போக்குவரத்து, தொடர்பாடல் துறைகளில் ஏற்பட்ட மாற்றங்கள் தொடர்பாக விமர்சிப்பர்.

**9.** (i) கைத்தொழில் புரட்சி ஆரம்பமாவதற்கு உதவிய மூலப்பொருட்கள், முடிவுப்பொருட்கள், நிதி நடவடிக்கைகளை வழங்குவதில் முதலிடம் கொண்டிருந்த பிரித்தானிய நகரம் எது? (01 புள்ளி)

(ii) கைத்தொழில் புரட்சி காலத்தில் பெருமளவில் பயன்படுத்தப்பட்ட கனிப்பொருள் வகை **இரண்டின்** பெயர் தருக. (02 புள்ளிகள்)

(iii) கைத்தொழில் புரட்சிக் காலத்தில் உற்பத்தியாக்கப்பட்ட புதிய உற்பத்திகள் சில கீழே தரப்பட்டுள்ளன. அவற்றுடன் தொடர்புடைய தனிநபர்கள் யார் என்பதை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிவுசெய்து **ஒழுங்குமுறைப்படி** எழுதுக.

*A* - புகையிரத என்ஜின்
*B* - வானொலி
*C* - மோட்டார் வாகனம்
*D* - ஆகாய விமானம்

(ஹென்றி போட், டெம்பலர், சாமுவேல் மோஸ், குக்லி மார்க்கோனி, ஜோர்ஜ் ஸ்டீவன்சன், ஜேம்ஸ் வோட், ரைட் சகோதரர்கள், லொகி பெயாட்) (04 புள்ளிகள்)

(iv) கைத்தொழிற் புரட்சிக் காலத்தில் இங்கிலாந்தில் நெசவுக் கைத்தொழில் விரைவாக முன்னேறுவதில் செல்வாக்குச் செலுத்திய **இரண்டு** காரணங்களை விளக்குக. (05 புள்ளிகள்)

(v) கைத்தொழிற் புரட்சியின் செல்வாக்கின் விளைவாக இலங்கையில் போக்குவரத்துத் துறை, தொடர்பாடல் துறை என்பவற்றில் ஏற்பட்ட மாற்றம் **ஒவ்வொன்றைக்** குறிப்பிட்டு உதாரணங்களுடன் விவரிக்குக. (06 புள்ளிகள்)

(i) லண்டன் **( 01 புள்ளி )**

(ii) இரும்புத்தாது, நிலக்கரி **( 02 புள்ளிகள்)**


Download all Past Papers >> https://bookbeekid.com/resource/past-papers/
Department of Examinations - Sri Lanka

(iii) A – ஜோர்ஜ் ஸ்டீவன்சன்

B – குக்லி மார்க்கோனி

C – டெம்லர்

D – ரைட் சகோதரர்கள்

**( 04 புள்ளிகள் )**

( iv) – புதிய இயந்திர சாதனங்கள் கண்டறியப்பட்டது (ஜோன். கே – பறக்கும் நூனாழி, ஜெனி இயந்திரம், நீர்ச் சக்கரம்...... மியூல் இயந்திரம்)

– புதிய தொழில்நுட்ப முறைகள் கண்டுபிடிக்கப்பட்டமை

– பிரித்தானியாவின் பருத்தித் துணிகளுக்கு குடியேற்ற நாடுகளில் அதிக கேள்வி நிலவியமை

– உள்நாட்டில் நெசவுக் கைத்தொழிலுக்கு தேவையான மூலப் பொருட்கள் இலகுவாகப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்தமை.

**(காரணி 02 புள்ளிகள், விளக்கம் 03 புள்ளிகள்)**
**(02 + 03 = 05 புள்ளிகள்)**

(v) **போக்குவரத்து**

– பெருந்தெருக்களும், புகையிரதப் பாதைகளும் அமைக்கப்பட்டமை
– பாலங்கள் அமைக்கப்பட்டமை
– துறைமுக வசதிகள் மேலும் விருத்தி செய்யப்பட்டமை
– ஆகாய விமானப் போக்குவரத்து விருத்தி செய்யப்பட்டது.

**தொடர்பாடல்**

– தபால் சேவை ஆரம்பிக்கப்பட்டது
– தந்தி சேவை ஆரம்பிக்கப்பட்டது.
– தொலைபேசி வசதிகள் விருத்தி செய்யப்பட்டது.

**(02 X 03 = 06 புள்ளிகள்)**

Department of Examinations - Sri Lanka

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/